# முடிவுரை

*"மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்ல" (எரே. 10:23) என்பதால், அவன் தன் பாதைக்கு வெளிச்சம் காட்ட இயற்கைக்கு மேலான உதவி அவனுக்குத் தேவைப்படுகின்றது. இந்தத் தேவையை நிறைவேற்ற, நம் அன்பான தேவன் தம் நித்திய வசனமான வேதாகமத்தைக் கொடுத்துள்ளார். இந்தப் பரிசுத்த புத்தகமானது, "தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக" (2 தீமோ. 3:16) வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் பக்கங்களுக்குள், ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவும் உள்ளன (2 பேது. 1:3).*

## வேதாகமத்தின் நிறைவான தன்மை

*வேதாகமம் எப்பொழுதும் நிறைவான தன்மை கொண்டது என்ற உறுதிப்பாடானது விலையேறப் பெற்ற ஒரு ஆறுதலாகவும், நம்பிக்கையின் மூல ஆதாரமாகவும் இருந்தது, இருக்கிறது மற்றும் எப்பொழுதும் இருக்கும். இயேசுவானவர், தமது அப்போஸ்தலர்களைப் பரிசுத்த ஆவியானவர் "சகல சத்தியத்திற்குள்ளும்'' வழி நடத்துவார் (யோவா. 16:13) என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார். அது நிறைவேற்றப்பட்ட பிறகு, வேறு புதிய வெளிப்படுத்துதல் என்பது ஒருபொழுதும் ஏற்படுத்தப்பட முடியாது. ''சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை'' எழுதும்படி (யாக். 1:25) தமக்கு ஒப்புவிக்கப்பட்ட பணியைப் பரிசுத்த ஆவியானவர் நிறைவேற்றி, மனிதருக்கு அதை "ஒருவிசை ஒப்புக்கொடுத்து" (யூதா 3) விட்டார். பரலோகத்தின் இந்த பயனுள்ள செயலானது கி.பி. முதலாம் நூற்றாண்டில் ஒரு தரம் செய்து முடிக்கப்பட்ட பிறகு, வேதாகம பதிவேட்டில் வேறு எந்த மாற்றமும் செய்யப்பட்டால் அது ஒரு தூதனால் தொடங்கப் பெற்றதாயிருப்பினும் அது மனிதரால் புரட்டப்பட்ட வழிகாட்டுதலாகவே இருக்கும் (கலா. 1:8, 9). ஏவுதல் பெற்ற அந்த வழிகாட்டும் புத்தகத்துடன் ஒன்றைக் கூட்டுபவர்களுக்கோ அல்லது அதில் இருந்து ஒன்றைக் குறைப்பவர்களுக்கோ பரலோகத்திலிருந்து சாபம் வந்து சேருகின்றது (2 யோவா. 9-11; வெளி. 22:18, 19). அறியப்பட்டுள்ள புத்தகங்களில் மேம்படுத்துதல் என்பதற்கு உட்படாத புத்தகமாக இருப்பது இது ஒன்றேயாகும். ஒருவேளை, (மார்மன் புத்தகத்தில் உரிமை*

*கோரப்பட்டுள்ளபடி 1* Nephi *13:26, 40) "எளிய மற்றும் மிக மதிப்புடைய பகுதிகள்" பல தொலைந்து போயிருந்தால், தேவையில் உள்ள, பாவம் நிறைந்த மனிதர் உதவியற்ற ஒரு நிலையிலேயே இருக்கின்றார் என்றாகின்றது. இது உண்மையாய் இருந்தால், பாவிகளுக்கான தேவனுடைய அன்பும், அவரது பரிவிரக்கத்தினால் பாதுகாக்கப்பட்டு வரும் அவருடைய முழுமையான வேதாகமமும் புகழப்பட முடிந்திராது.*

*அரசர்களும், அவிசுவாசிகளும், சமயவாதிகளும், ''ஜீவனும் வல்லமையும் உள்ள" (எபி. 4:12) வசனத்தை எதிர்த்து நின்றிருந்தாலும், பரலோகத்தில் தொடக்கம் பெற்ற அந்தப் புத்தகமானது (2 பேது. 1:21) மாற்றம் இல்லாததாகவும், மாற்றப்பட முடியாததாகவும் இருக்கின்றது. வேதாகமத்தில் இயேசுவின் பாகமானது அழிக்கப்பட முடியாதது என்று அவர் உறுதிப்படுத்தினார்: ''வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை" (மத். 24:35; யோவா. 12:48ஐக் காணவும்). முழு வேதாகமத்திற்கும், ''கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்" (1 பேது. 1:25) என்ற வாக்குத்தத்தம் உள்ளது.*

## வேதாகமம் உறுதிப்படுத்தப்படுதல்

*புதைபொருள் ஆராய்ச்சியாளர்களின் மண்வெட்டியானது சத்தியத்திற்கும் வேதாகமத்திற்கும் ஒரு நண்பனாகவே இருக்கின்றது. பலஸ்தீனத்தில் பல ஆண்டுகளாக புதைபொருள்களைத் தோண்டும் பணியில் ஈடுபட்ட பிறகு, சின்சினாட்டியில் உள்ள எபிரெய யூனியன் செமினரியில் உள்ள பேராசிரியர் நெல்சன் குளூக் அவர்கள், தம்முடைய மற்றும் தம் சக பணியாளர்களுடைய கண்டுபிடிப்புகள் யாவும் வேதாகமத்தின் உண்மைகளை/சத்தியங்களை உறுதிப்படுத்துகின்றன என்று எழுதினார். அவர், ''வேதாகமத்தின் வரலாற்றுக் கூற்று எதற்கும் முரண்பட்ட அல்லது மறுக்கின்ற புதைபொருள் கண்டுபிடிப்பு என்பது ஒரு காலத்திலும் ஒன்று கூடக் கண்டறியப்பட்டதில்லை" என்று கூறினார்* (Nelson Glueck, "New York Times Book Review").

## முடிவுரை

*புரிந்து கொள்ளக்கூடிய நம்பிக்கையுடன் கிறிஸ்தவர்கள், பரலோகத்தின் வெளிப்படுத்துதலுக்கான தங்களின் தேவையானது பரலோகத்தின் பரிசாகக் கிடைத்த புத்தகத்தில் நிறைவேறுவதாகத் தொடர்ந்து நம்புகின்றார்கள். நன்மையை அருளுகின்றவர், எல்லாத் தலைமுறைகளுக்கும் அந்தப் பரிசுக்கு பரிவிரக்கம் கொண்ட பாதுகாப்பு அருளும் தேவையைச் சந்தித்துள்ளார்.*